பொது சுற்றிக்கை கடித இல: 02-118/2014

எனது இல:- MA/MS/E/03/2014
சுகாதார அமைச்சு,
"சுவசிறிபாய"
385, பத்தேகம விமலவங்ச தேரோ
மாவத்தை,
கொழும்பு 10.

24.08.2014

மாகாண சுகாதார சேவைகள் செயலாளர்கள்,
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
வைத்தியசாலை பணிப்பாளர்கள், மருத்துவ அத்தியட்சகர்கள்,
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவுகள், நிகழ்ச்சித் திட்டங்களின் பணிப்பாளர்கள்,
பிரதேச வைத்தியசாலைகளின் மாவட்ட மருத்துவ அலுவலர்கள்,
சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்கள்.

## மருத்துவ அலுவலர்களை முன்மொழியப்பட்ட பதவிகளுக்கு இணைத்துக் கொள்ளல்

அரச சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்தது 03 வருட சேவை காலத்தைக் கொண்டுள்ள சுகாதார சேவைத் திணைக்களத்தில் பணியாற்றும் தர மருத்துவ அலுவலர்களிடமிருந்து நிறுவனங்களின் இணைக்கப்பட்டுள்ள பட்டியலிலுள்ள பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவிகளுக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் திணைக்களத்தில் அவர்களது சிரேஷ்ட நிலையினை இழக்க மாட்டார்கள்.

இவ்வறிவித்தலில் காணப்படும் மாதிரிப்படிவத்திற்கமைய விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு **24.09.2014** ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர் / விஷேட இயக்கங்களின் தலைவர் / பன்முகப்படுத்தப்பட்ட பிரிவுகளின் தலைவர் ஊடாக பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

**டாக்டர். லால் பனாபிட்டிய**
**பணிப்பாளர் (மருத்துவ சேவை)**
**சுகாதார அமைச்சு,**
**"சுவசிறிபாய"**
**கொழும்பு 10.**

விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு நேரடியாக அனுப்பப்படக்கூடாது.

மேற்படி சகல பதவிகளினதும் தெரிவு, தர சிரேஷ்ட நிலையின் அடிப்படையில் அமையும்.

தமது விண்ணப்பங்களை விலக்கிக்கொள்ள விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியின் 02 வாரங்களுக்குள் அவ்வாறு செய்தல் வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் பட்டப்பின் படிப்பு (PGIM) பயிற்சியைத் தவிர குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் மேற்படி பதவிகளிலிருந்து விடுகிக்கப்பட மாட்டார்கள்.

**சுதர்மா கருணாரட்ன**
**செயலாளர்,**
**சுகாதார அமைச்சு**

பிரதி : சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர்கள்